முன்னுரை

அஸ்ஸலாமு அலைகும் (வரஹ்)

மீலாத் வரலாறு என்ற கட்டுரையை படிக்கும் அன்பான வாசகர்களுக்கு இந்த கட்டுரையானது "தாரீஹே மீலாத்" என்ற உர்தூ நூலின் சுருக்கமான மொழிபெயர்ப்பாகும். நடுநிலையான கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டுள்ளது.வாசகர்களுக்கு ஏற்படும் சிரமத்தை தவிர்ப்பதற்காக இந்த தலைப்பில் தொடராக கட்டுரை எழுதப்படுகிறது.நாம் அறிந்த வரையில் தமிழ் மொழியில் இது குறித்த விரிவான ஆய்வு நூல் வெளிவரவில்லை.இன்ஷா அல்லாஹ் இந்த கட்டுரையானது அதனை நிவர்த்தி செய்யும் என ஆதரவு வைக்கிறோம்!

அல்லாஹுதஆலா நமக்கு சத்தியத்தை சத்தியமாக காட்டுவானாக! அதனைப் பின்பற்றும் வாய்ப்பை நல்குவானாக! மேலும் அசத்தியத்தை அசத்தியமாக காட்டுவானாக! அதனை தவிர்ந்து கொள்ளும் வாய்ப்பை நல்குவானாக!

நபி (ஸல்) அவர்களின் பிறப்பைப் பற்றி பேசுதல் மற்றும் இன்று நடைமுறையில் உள்ள மீலாத் சபைகள் அல்லது மௌலிது சபைகள் இரண்டும்

தனித்தனியானது.இரண்டிற்கும் மத்தியில் சாதாரண வித்தியாசமில்லை.மாறாக வானம் பூமி அளவிற்கு வித்தியாசம் உள்ளது.

நபி (ஸல்) அவர்களின் பிறப்பை பற்றி பயான் செய்யும் விஷயத்தில் எவருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது.அனைவரும் ஒருமித்துள்ளனர்.எந்த ஒரு சந்தேகமின்றி அனுமதி உள்ளது.மாறாக நன்மையையும்,பரக்கத்தையும் பெற்றுத்தரும்.ஆக நபி (ஸல்) அவர்களின் பிறப்பை பற்றி பேசுவதை எவரும் தடுக்கவில்லை. எனினும் இன்று நடைமுறையில் உள்ள மௌலித்,மீலாத் விழாக்களின் விஷயத்தில் கருத்துவேறுபாடு உள்ளது.

இதனை குறித்து குர்ஆன், ஹதீஸ்களில்,திருக்குர்ஆன் விளக்கவுரைகள்,பிக்ஹ், வரலாறு சரிதைகளிலும் நீண்ட தேடலுக்குப் பிறகும் அண்ணல் நபியவர்களின் காலத்திலோ, ஸஹாபாக்களின் காலத்திலோ, தாபியீன்கள், தப்உத்தாபியீன்களின் காலத்திலோ காணமுடியவில்லை.

மௌலானா ஸய்யித் ஸுலைமான் நத்வி (ரஹ்) ஸீரத்துன் நபியில் மூன்றாம் பாகம் 668 பக்கம் இரண்டாம் பதிப்பில் ஆதாரமின்றி குறிப்பிட்டுள்ளார்கள். இஸ்லாத்தில் மீலாத்

நடைமுறையானது நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஆரம்பமானது.ஆனால் எதார்த்தம் என்னவெனில் இஸ்லாமிய வரலாற்றில் 600 வருடம் வரை அதைக் குறித்த எந்த குறிப்பும் இல்லை.இதன் படி அறிஞர்களின் ஒன்றுப்பட்ட கருத்தானது 600 வருடம் வரை மீலாத் நடைமுறையில் இல்லை.

மீலாது விழாக்களை ஆதரிக்கும் அறிஞர் மௌலவி அப்துஸ்ஸமீஃ ஸாஹிப் அன்வாருஸ்ஸாதிஆவில் பக்கம் 159ல் குறிப்பிட்டுள்ளார் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது, சந்தோஷமாக இருப்பது அதுவும் குறிப்பிட்ட மாதமான ரபியுல் அவ்வலில் அதிலும் குறிப்பாக 12ம் நாளில் மீலாத் கொண்டாடுதல் பிற்காலத்தில் தோன்றியது.ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலாகும்.

மஜ்லிஸ் (சபை)மீலாதை உருவாக்கியவர் யார்?

நபி ஸல் அவர்கள், குலஃபாயே ராஷிதீன்கள், இமாம்கள், இவர்களின் காலத்தில் நடைமுறையில் இல்லை என்பதால் பிறகு இதனை நடைமுறைப்படுத்தியவர் உருவாக்கியவர் யார்?

மஜ்மூஆ ஸஆதத்தின் ஆசிரியர் (2/12,13) எழுதியுள்ளார்: ஒரு மார்க்க அறிஞர் இந்தியாவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மக்காவிலே

வசிப்பிடத்தை தேர்ந்தெடுத்துக்கொண்டார்.அவர் மீலாத் குறித்த உண்மை நிலையை கூறுகிறார்: ரோம் நாட்டிலிருந்து பாஷ் என்று சொல்லப்படும் படைத்தளபதி மக்காவிற்கு வந்தார்.அவர் மீலாத் சபைகளை பார்த்துவிட்டு மக்காவில் உள்ள முஃப்தியிடம் இதனைக் குறித்து தீர்ப்பு என்ன? எந்த காலத்தில் உருவானது? ஷரீஅத்தில் இதன் அந்தஸ்த்து என்ன? அதனுடன் ஆதாரங்களை என்னிடம் அனுப்புங்கள் என்றார்.பிறகு முஃப்தி அவர்கள் பல்வேறு நூல்களை ஆராய்ந்த பிறகும் இது குறித்த ஆதாரம் கிடைக்கவில்லை.எனினும் வரலாற்று நூலிலே ஹிஜ்ரி 700 வருடத்தில் மிஸ்ரிலே ஒரு நபர் முஸ்லிம்களுக்கு விருந்தளித்தார்.விருந்து உபசரிப்புக்கு முன்பாக ஓர் மார்க்க ஆறிஞர் உறையாற்றினார்.

அவர் ஹதீஸ்களில் ஆதாரப்பூர்வமாக அறிவிக்கப்படுபவைகளை எடுத்து கூறினார்.மக்கள் இந்நிகழ்ச்சியினால் பெரிதும் மகிழ்ந்தனர்.பிறகு வேறொரு நபர் இதே முறையில் சபையை ஏற்படுத்தினார்.பிறகு மூன்றாவது நபர் இதே போங்கில் நடத்தினார்.பிறகு நாட்கள் செல்ல செல்ல மீலாத் சபைகள் பிரபல்யமானது என்கிற செய்தியானது மக்கா முஃப்திக்கு கிடைத்தது.இந்த நடைமுறையை படைத்தளபதிக்கு எழுதி

அனுப்பினார்.எனினும் இந்த அமலை குறித்து கூடும் கூடாது என்ற தீர்ப்பை அளிக்கவில்லை.

எனினும் இந்த நிகழ்வின் மூலம் ஹிஜ்ரத் செய்த மார்க்க அறிஞர், மக்கா மு:ப்தி, படைத்தளபதி இவர்களின் நிலைகளை நாம் அறியமுடியவில்லை.700ம் வருடத்திலே முதலில் மீலாது சபையை உருவாக்கியவர் யார்? அதில் உரையாற்றிய மார்க்க அறிஞர் யார் என்பதையும் இதன் மூலம் அறியமுடியவில்லை.?

முதன் முதலில் மீலாதை உருவாக்கியவர் உமருப்னு முல்லா முஹம்மது மவ்ஸில் என்பதை அனைவரும் ஏற்கின்றனர்.இவர்தான் முதன்முதலில் மவ்ஸிலில் நடைமுறையுள்ள மீலாதை உருவாக்கினார். " ஸுபுலுல் ஹுதா வ ரஷாத் ∴ பி ஸீரதி ஹைருல் இபாத்" என்ற நூலிலே அல்லாமா முஹம்மது இப்னு அலி யூசுப் திமிஷ்கி ஷாமி அவர்கள் முதன் முதலில் மீலாது சபையை உண்டாக்கியவர் உமர் இப்னு முஹம்மத் இவர் நல்ல மனிதர் பிரபல்யமானவர் இவரைதான் மன்னர் அர்பல் மீலாது சபையை நடைமுறைப்படுத்துவதிலே பின்பற்றினார். மௌலவி அப்துல்ஹக் ஸாஹிபின் கட்டுரையான "அத்துர்ருல் முனள்ளம் ∴ பி ஹுக்மி அமலி மௌலிதின் நபிய்யில் அ:ளம்" 160 இதில்

பின்வருமாறு எழுதியுள்ளார் ஆரம்பமாக இந்த அமலானது ரபீயுல் அவ்வலில் செய்வது குறிப்பான முறையில் செய்வது மவ்ஸில் என்ற ஊரில் ஆரம்பமானது.ஈராக் நாட்டிலே உள்ளது.அங்கு பயபக்தியாளர் மார்க்கபற்றுள்ளவர் பெரியோர் உமர் நல்லோர்களில் உள்ளவர்.அன்னார்தான்

முதன் முதலில் மீலாத் சபைகளை நடைமுறைப்படுத்தினார்.

மௌலவி முஹம்மது அஃஃளம் அவர்களின் ஃஃபத்ஹுல்வதூத் என்ற நூலில் 8ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் அறிந்து கொள்ளுங்கள் நபியின் மீலாத் சபையை உண்டாக்கியவர் அக்கால அறிஞர் பெரியோருமான ஹள்ரத் உமருப்னு முல்லா முஹம்மத் மூஸிலி

உமர் இப்னு முஹம்மத் அவர்கள் முஜ்தஹித் ஆய்வாளர் அல்ல. முஹத்திஸும் அல்ல.பகீஹும் அல்ல மாறாக உண்மையான ஆய்வுக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அறியப்படாத நபர்.உண்மையில் அரசர் அர்பலின் சமூகத்தில் மீலாத் நடைபெற்றுள்ளது.இதில் அரசர் அன்னாரை பின்பற்றி நடைமுறைப்படுத்தியுள்ளார். இல்லையெனில் அன்னாரைப் பற்றி முற்றிலும்

அறிமுகம் இருந்திருக்காது.அல்லாமா அபூஷாமா வரலாற்று ஆசிரியர் ஷாமி அவர்கள் அன்னாரைப்பற்றி நல்லோர் பிரபல்யமானவர் என்பதாக எழுதியிருந்தாலும் அன்னார் மார்க்க சட்டங்களிலும் ஆய்வுகளிலும் உள்ள திறனை இதன் மூலம் அறியமுடியாது என்பதானது மார்க்க அறிஞர்கள் அறிந்த ஒன்றாகும்.வரலாற்றாசிரியர் ஷாமி அபூஷாமா இருவரும் அன்னாரைப்பற்றி தனித்த ஆய்வின் மூலம் கூறினார்களா? அல்லது வெறும் பிரபல்யத்தை மட்டும் முன்வைத்து கூறினார்களா? என்பதையும் அறியமுடியவில்லை.இது மட்டுமின்றி எத்தனையோ நல்லோர்கள் பிரபல்யமாக இருப்பார்கள் எனினும் ஷரீஅத்தின் சட்டங்களிலும் ஹதீஸ்களை அறிவிக்கும் விஷயத்திலும் ஆற்றல் இல்லாதவர்களாக இருப்பார்கள்.அறிவிப்பாளர்கள் சம்பந்தமான நூல்களில் ஏராளமான உதாரணங்கள் இது குறித்து உள்ளன. உதாரணத்திற்கு ஒன்றை பார்ப்போம் இப்னு ஹிப்பான் அவர்கள் கூறுகிறார்கள் அப்துல்லாஹ் இப்னு முஹர்ரர் அல்லாஹ்வின் அடியார்களில் நல்லோர்களில் கட்டுப்பட்டவர் எனினும் அவர் தவறிழைப்பவர் சரியாக அறியாதவர் ஹதீஸ்களை புரட்டி கூறுபவர் சரியான முறையில் விளக்கம் இல்லாதவர்

ஆக இரு வரலாற்று ஆசிரியர்களும் உமர் இப்னு முஹம்மத் அவர்களைப் பற்றி நல்லவிதமாக கூறியுள்ளனர் எனினும் மார்க்க சட்டங்களில் பிக்ஹ் துறையில் இவரின் திறனை இதன் மூலம் அறியமுடியவில்லை. அதே சமயத்தில் அன்னாரை பெரும் உலமாக்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர் குறைகூறியுள்ளனர். முன்னோர்களில் மார்க்க அறிஞரான அல்லாமா தாஜுத்தீன் பாகிஹானி (ரஹ்) அவர்கள் அவரது நூலான

"அல்மவ்ரித் ஃபில் கலாமி மஅ அமலில் மவ்லிதில்" குறிப்பிட்டுள்ளார் மௌலிதை உருவாக்கியவர்கள் பத்தாலூன்கள் தவறுசெய்பவர்கள் மனோ இச்சைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் அதன் மூலம் வயிறு நிரம்ப உண்டு கழிப்பதுதான் (அவர்களின் நோக்கமாகும்)

"தவ்ளீஹுல் மராம் ஃபி பயானில் மவ்லித் வல் கியாம்" மீலாத் சபையை அரசர் அர்பல் மற்றும் உமர் இப்னு முல்லா முஹம்மது உண்டாக்கினார்கள்.இருவரும் மார்க்க அறிஞர்களிடம் நம்பகமானவர்களாக இல்லை.ஏனெனில் இருவரும் இசையை ரசிப்பவர்கள் வீண்விளையாட்டுகளில்

ஈடுபடுவார்கள் அதிலும் குறிப்பாக அரசர் அர்பல் நடனமாடுபவராக இருந்தார்.

"குர்ரதுல் உயூனின்" ஆசிரியர் 1பாகம் 48ம் பக்கத்தில் குறிப்பிடுகிறார்:

இந்த மீலாத் சபைகள் மூன்று நூற்றாண்டுகளுக்கு பிறகு பித்வாதிகளால் உண்டானது என்பதானது தெளிவாக வெளிப்படுகிறது. மேலும் கூறுகிறார் இன்று நடைமுறையில் உள்ள மீலாத் வழக்கமானது ஷைக் உமர் மற்றும் அரசர் முளஃப்பரின் வழிமுறையாகும்.

இந்த கருத்தை குர்ரதுல் உயூனின் ஆசிரியர் அப்துல்லாஹ் இப்னு அஸ்அத் யாபியிஷ் ஷாஃபியின் நூலான மிர்ஆதுல் ஜினானிலிருந்து எடுத்து சொல்கிறார்.

ஆக இதன் மூலமும் உமர் இப்னு முஹம்மத் அவர்கள் மார்க்க அறிஞர்களின் கண்ணோட்டத்தில் தவறு செய்பவர் விமர்சிக்கப்பட்டவர் என்பதை அறிய முடிகிறது.

முதல் நடைமுறை: இஸ்லாமியர்களிடம் 600 வருடம் வரையில் மஜ்லிஸ் மீலாத் வழக்கத்தில் இல்லை என்பதை முன்னால் நிரூபித்துள்ளோம்.

இதனை உருவாக்கியவர் உமர் இப்னு முஹம்மத் மற்றும் அரசர் அர்பல் என்பதனை குர்ரதுல் உயூனின் ஆசிரியரிடமிருந்து விளங்கமுடிகிறது.சில வரலாற்று ஆசிரியர்களிடமிருந்து ஆரம்பமாக அர்பல் உருவாக்கினார் என்பதை அறியமுடிகிறது.அல்லாமா ஸுயூத்தி (ரஹ்) அவர்கள் "ஹஸனுல் மக்ஸத் ஃபி அமலில் மவ்லித்" என்ற நூலில் எழுதியுள்ளார்கள்: முதன் முதலில் மீலாதை உண்டாக்கியவர் இப்னு முளப்பர் அபூஸயீத் இப்னு ஜைனுத்தீன் இப்னு அலி என்ற பெரும் அரசர்

ஆக அசலில் மீலாதை உருவாக்கியது உமர் இப்னு முஹம்மத் அவரை பின்பற்றி நடைமுறைப்படுத்தியது அர்பல் அரசர் அதன் பிறகுதான் மீலாத் வழமையாக இன்று வரையில் செயல்பட்டு வருகிறது.இதனை முயிஜ்ஜுத்தீன் ஹஸன் அவர்கள் தனது வரலாற்று நூலில் எழுதியுள்ளார்: இந்த அமலை நடைமுறைப்படுத்திய அரசர்களில் முதலாமவர் அர்பல் உள்ளார்.

இதனை மீலாத் ஆதரவாளரும், பரலேவிய அறிஞருமான அப்துஸ்ஸமீஃ அவர்கள் தனது நூலான "அன்வாருஸ்ஸாதிஆவில்"
பக்கம் 160 ல் இதே கருத்தையே உறுதிப்படுகிறார்.

இன்றைய மீலாதின் நடைமுறை:

இப்னு கல்கானின் " வஃபயாதுல் அஃயான்" மற்றும் "காமில் இப்னு அஸீர்" மற்றும் வேறு வரலாற்று நூல்களில் இதனைக் குறித்து விரிவாக கூறப்பட்டுள்ளது அதனின் சுருக்கம் என்னவெனில்

அந்த மன்னரின் பெயர் كوكبوری or كوكبری or كوكری பட்டப் பெயர் முளப்பர்தீன் அவரின் குன்னியத் அபூஸயீத்

இவர் ஹிஜ்ரி 548 ல் முஹர்ரம் மாதத்தில் பிறந்தார். அவரின் பதினான்கு வயதில் அவரது தந்தை அபுல் ஹஸன் ஜைனுத்தீன் அலி துர்குமானி மரணித்தார்.அதன் பிறகு இவர் கலீபாவானார்.இவர் சிறுவராக இருந்த காரணத்தால் இவரின் தந்தை ஜைனுத்தீன் அவர்கள், தனது உரிமைவிடப்பட்ட அடிமை காயிமாஜ் தகுதியானவர் நம்பிக்கைகுரியவர் என்பதை அறிந்ததனால் ஹிஜ்ரி 559ல் அர்பலின் நிர்வாகத்தை அவரிடம் ஒப்படைத்தார்.மேலும் அரசரே தனது மகனை (كوكبوری) வழிகாட்டியாக நியமித்தார்.ஆனால் சில நாட்களில் இளவரசருக்கும்

காயிமாஜ் இருவருக்கும் மத்தியில் ஏதோ ஒரு காரணத்தால் பிளவு ஏற்பட்டது.ஏற்பட்டது. كوكبورىக்கு மாற்றம் செய்தார். كوكبورى அரசாட்சிக்கு தகுதியானவர் அல்ல என அரசாணையை பிறப்பித்தார்.ஆரம்பமாக கோட்டையை மூடினார்.நாட்டை விட்டு வெளியேற்றினார்.كوكبورى அர்பலிலிருந்து பக்தாத் சென்றடைந்தார்.அங்கும் தோல்வியுற்று மவ்ஸில் சென்றார்.அங்கு ஸை ஃபுத்தீன் என்ற அரசர் அடைக்கலம் தந்தார்.எனினும் அவர் அங்கு தங்கவில்லை.பிறகு அரசர் ஸலாஹுத்தீனிடம் சென்றார்.இறுதியில் அரசர் தனது சகோதரி ரபிஆவை அவருக்கு நிகாஹ் செய்து வைத்தார்.அவரின் வாழ்வில் கண்ணியமும் முன்னேற்றம் உருவானது.எப்பொழுது அரசரின் சகோதரர் யூசுப் மரணித்தாரோ كوكبورىன் வேண்டுகோளின்படி ஸலாஹுத்தீன் அர்பலை அன்பளிப்பாக கொடுத்தார்.ஹிஜ்ரி 586 லே திரும்பிவந்தார்.பிறகு كوكبورى தனது தந்தையின் அரியணையில் ஏறி அர்பலின் அரசரானார்.தனது தந்தைக்கு ஈடாக இவரும் மிகப்பெரிய வீரர், துணிச்சல்மிக்கவர். ஸலாஹுத்தீன் அரசரிடம் இணைந்து பல்வேறு போர்களில் கலந்து கொண்டவர்.அனைத்திலும் தனது வீரத்தை வெளிப்படுத்தினார்.அவரை தவிர எவராலும் எதிர்த்து

நிற்க முடியாது என்று சொல்லப்படும் அளவிற்கு நிலைத்து நின்று போரிட்டார்.மக்கள் அவரை வீண்விரயம் செய்பவர் என்று சொல்லும் அளவிற்கு கொடையளியப்பவராக இருந்தார்.நற்செயல், நற்காரியங்களில் ஆர்வம் உள்ளவர்.நாணயங்களை பகரமின்றி நாள்தோறும் ஏழைகளுக்கு வாரிவழங்குவார்.நிரந்தர நோயாளிகள் பார்வையற்றோருக்கு நான்கு இடங்களை கட்டிக்கொடுத்தார்.ஆதரவற்ற குழந்தைகளுக்கு தனித்தனியான கட்டிடங்களை கட்டினார்.அதுமட்டுமின்றி அநாதை விடுதி, விதவை வாழ்வு மையம், விருந்தாளிகள் தங்கும் விடுதி, மதரஸாக்கள், கான்காஹ்கள் கட்டும்படி வலியுறுத்தினார்.

எல்லா இடத்திலும் வாழ்வதற்கு அடிப்படையான வசதிகளை செய்து கொடுத்தார்.தானே சென்று கண்காணிப்பார்.அனைத்து பகுதிகளும் செழிப்பாக இருந்தது.நஸரானிகளிடமிருந்து இஸ்லாமிய கைதிகளை விடுதலை செய்வதற்கு மதாயினிற்கு ஒரு ஜமாஅத்தை அதிகமான செல்வத்தை பிணையாக கொடுத்து வரும்படி அனுப்புவார்.ஒவ்வொரு வருடமும் ஹாஜிகளின் காபிலாவை மக்காவிற்கு அனுப்புவார்.மக்காவில் இது குறித்த நினைவுச்சின்னங்கள் உள்ளது. பெரும்

பொருட் செலவில் அரபாதில் ஹாஜிகளுக்கு தண்ணீரை ஏற்படுத்திய முதல் அரசர் இவர்தான் காஸிய்யூனில் மஸ்ஜித் ஜாமிஆ முளப்பரை உருவாக்கினார்.சுருக்கமாக சொல்ல வேண்மெனில் வீரமிக்கவர், மிக நீதமானவர், கொடை வள்ளல் இவரின் செயல்களில் உமர் இப்னு முஹம்மது செயல்படுத்திய மீலாத் மஜ்லிஸை பின்பற்றி வருடந்தோறும் பிரம்மாண்டமான மீலாத் மஜ்லிஸை நடைமுறைப்படுத்தினார்.இதனைப் பற்றி இன்ஷா அல்லாஹ் பிறகு பார்ப்போம்!

மீலாத் வரலாறு தொடர் (2)

ரமளான் 10 அன்று ஹிஜ்ரி 630 ல் அரசர் அர்பல் மரணித்தார்.அர்பலின் அரண்மனையிலேயே அடக்கம் செய்யப்பட்டார்.பிறகு ஹிஜ்ரி 631லே அவரின் வஸிய்யத்திற்கு ஏற்ப அவரின் ஜனாஸா மக்காவிற்கு எடுத்து செல்லப்பட்டது.அவர் வாழும்போதே அங்கு தன்னை அடக்கம் செய்வதற்காக குப்பா கட்டி வைத்திருந்தார்.எனினும் ஏதோ காரணத்தால் ஜனாஸாவை மக்காவிற்கு எடுத்து செல்ல முடியவில்லை.மக்கள் திரும்பி செல்லும் வழியில் கூஃபாவில் அடக்கம் செய்தார்கள்.

ஆக அரசர் அர்பலின் வரலாற்றின் மூலம் அவர் வீரர், நீதமானவர், கொடைவள்ளல் எனினும் அவர் பலமானவரா? இல்லையா? என்பதை இதனை வைத்து அறியமுடியாது.

அதே நேரத்தில் அறிஞர்களான தவ்ளீஹுல் மராமின் ஆசிரியர், குர்ரதுல் உயூனின் ஆசிரியர் அர்பலை தெளிவாக பலமானவர் அல்ல என்கிறார்கள்.இது குறித்து முன்னால் சென்று விட்டது.மீலாத் ஆதரவாளர்கள் அவரை பலமானவர் என்பதாக கூறுகின்றனர்.இதனைக் குறித்து பரலேவிய அறிஞர் மௌலவி அப்துஸ்ஸமீஃ " அன்வாரே ஸாதிஆவிலே" மீலாதை எதிர்ப்பவர்களை விமர்சிக்கிறார். அதனின் சுருக்கமான கருத்தானது மீலாதை நிராகரிப்பவர்கள் அரசர் முளப்பரை விமர்சிக்கின்றார்கள்.அவரின் காலாட்படையிலே இசை இசைக்கப்பட்டது.இதன் மூலம் நிராகரிப்பாளர்கள், இதனை இன்னிசையாக எடுத்துக்கொண்டு அவரின் மீது களங்கம் சுமத்துகின்றனர்.உண்மையில் என்னவெனில் மத்தளம் போன்று போர்களிலே ஆயுதங்களுடன் பயன்படுத்தப்படும் சாமான் இது போன்ற கருவி வேறு. வீண் வேடிக்கைக்காக பயன்படுத்தப்படும் கருவிகள் வேறு. நபி (ஸல்) அவர்களின் புகழ்மாலையை செவிமடுத்து மகிழ்ச்சி மிகுதியால்

அது உபயோகிக்கப்படுகிறது.இதனை நிராகரிப்பாளர்கள் மீலாத் விழாவிலே நாட்டியமாடினார்கள் என்பதாக திணிக்கின்றனர். இவரைப் பற்றி இப்னு கஸீர் ரஹ் அவர்கள் كان شهما شجاعا بطلا عاقلا عادلا محمود السريرة என்று போற்றிப் புகழ்ந்துள்ளார்.இதனை அல்லாமா ஜர்கானி (ரஹ்)மவாஹிபின் விரிவுரையாளர் எடுத்தெழுதியுள்ளார்.

அப்துஸ்ஸமீஃ இந்த வாதத்திற்கு மௌலவி அப்துல் காலிக் கான் ஸாஹிப் "பத்ஹுல் மவ்ஜிதில்" மறுப்பு அளித்துள்ளார்கள் .

மீலாத் விழாவில் மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்தின் போது போர் மத்தளத்திற்கும், காலாட்படையின் இன்னிசைக்கும் என்ன வேலை? மீலாத் விழாவா? அல்லது காபிர்களுக்கு எதிராக போரா? என்று எவராவது கேட்டால் என்ன சொல்வீர்கள்? رقص என்பதற்கு ناچ (நடனமாடுதல்)என மொழிபெயர்த்தால் என்ன தவறு? ஏனெனில் இரண்டும் ஒன்றுதான் வெறும் மொழி ரீதியான வித்தியாசம் மட்டும்தான் رقص என்பதற்கு ஹிந்தியில் ناچ (நடனமாடுதல்)

முக்கிய குறிப்பு: பரலேவி மௌலவி அப்துஸ் ஸமீஃ என்பவர் " தப்ல்" என்ற மத்தளம் இஸ்லாத்தில்

பயன்படுத்துவது கூடும் என்பதைப் போன்று எழுதியுள்ளார்.ஆனால் இஸ்லாத்தில் " தஃப்" என்ற கருஞ்சிரா மட்டும்தான் அனுமதி.இதை தவிர மற்ற எந்த இசை கருவிக்கும் அனுமதியில்லை என்பதுதான் பெரும்பான்மையான உலமாக்களின் தீர்ப்பாகும்.

பரலேவி அறிஞர் அப்துஸ்ஸமீஃ கூறுகிற கருத்தில் நமக்கு மாற்று கருத்து இருந்தாலும் அர்பல் அரசரை குறித்து வரலாற்று நூல்களில் புகழப்பட்டுள்ளது என்பதாக கூறுவது சரியானதுதான்.அதில் நமக்கு மாற்று கருத்து இல்லை.எனினும் இதன் மூலம் அவர் பலமானவர் என்கிற வாதம் நிரூபணமாகாது.வீரம், நீதம்,துணிச்சல், கொடைத்தன்மை போன்ற பண்புகளின் மூலம் பலமானவர் என்பதானது அவசியமாகாது.இதனால்தான் வரலாற்று ஆய்வாளர்கள் அவரை பலகீனமானவர் என்பதாக தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றனர்.முயுஜ்ஜுத்தீன் ஹஸன் (ரஹ்) அவர்கள் தனது வரலாற்று நூலில் எழுதியிருப்பதை அல்லாமா அஹ்மத் இப்னு முஹம்மத் மாலிகி மிஸ்ரி தனது நூலான " கவ்லு முஃதமதில்" எடுத்து சொல்கிறார்: அரசர் அர்பல் வீண் விரயம் செய்பவர், மேலும் அவர் அக்கால உலமாக்களை தங்களின் சுய

ஆய்வு இஜ்திஹாதின் பேரில் அமல் செய்யும்படி வலியுறுத்தினார். மற்றவர்களை தக்லீத் செய்வதையும், வழிமுறையில் செல்வதையும் விட்டுவிடவும் என்றார்.இதனால் உலமாக்களின் ஒரு ஜமாஅத் தக்லீதை விடுவதன் பால் சாய்ந்தனர்.

இதன் மூலம் இரு விஷயங்களை விளங்க முடிகிறது. வீண்விரையம் செய்பவர், இமாம்களின் தக்லீதிற்கு எதிரானவர், மற்றவர்களையும் தக்லீதை விடும்படி கட்டளையிடுபவர் இதனை பரலேவிய அறிஞர் அப்துஸ்ஸமீஃ. அவர்கள் மௌனமாக ஏற்கிறார். அதற்கு மாற்று விளக்கம் கொடுத்துள்ளார்.எனினும் மாற்று விளக்கமும் நிராகரிக்கப்பட வேண்டிய கருத்துதான்.

இப்னு ஜவ்லான் அவர்களின் வரலாற்று நூலான "மிர்ஆதுஜ்ஜமானில்" எழுதியுள்ளார்கள்: லுஹரிலிருந்து அஸர் வரை சூபியாக்களின் மஜ்லிஸில் இசையை செவிமடுப்பார்.அவர்களுடன் சேர்ந்து அவரும் நடனமாடுவார்.

இப்னு கல்கானின் விளக்கத்தின் மூலமும் இதனை அறிய முடிகிறது.

இப்னு கல்கான் அர்பலி ஷாபியி அவர்கள் தனது நூலான " வஃபயாதுல் அஃயானில்" தனது ஊரையும் சமகாலத்தையும் சேர்ந்த அரசர் அர்பலின் மீலாத்

மஜ்லிஸைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார்கள்:(அதனின் சுருக்கம்)

ஒவ்வொரு குழுவிலும் இசைக்கலைஞர்கள், பாடகர்கள், வீணாக பொழுது போக்குவர்கள் என தனித்தனியான ஜமாஅத்தாக இருப்பார்கள்.மீலாத் மஜ்லிஸிற்கு இரண்டு நாட்கள் இருக்கும் பொழுது மத்தள இசைக்கருவிகள்,

பாரம்பரிய இசைக்கருவிகள்,

பொழுது போக்கு சாமான்கள் இன்னும் பலவகையான பொருட்களை வாங்குவார்.மீலாத் இரவிலே ம:ரிபிற்கு பிறகு இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.அவருக்கு இன்னிசையை தவிர வேறு எதிலும் இன்பம் பெறமாட்டார். ஆக சுருக்கம் என்னவெனில் அர்பல் அரசர் வீரர், நீதமானவர், கொடைவள்ளல்,துணிச்சல் மிக்கவர் என்பதை கவனித்து புகழக்கத்தக்கவர் என்ற போதிலும் வீண்விரையம் செய்பவர்,புல்லாங்குழல் இசையை ரசிப்பவர், இமாம்களை தக்லீத் செய்வதற்கு எதிரானவர், தவறிழைப்பவர், பலகீனமானவர் என்பதால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளார்.

மௌலித் நூலின் முதல் ஆசிரியர்

மௌலித் நூலை முதன் முதலில் எழுதிய ஆசிரியர் உமர் இப்னு ஹஸன் இப்னு திஹ்யா கல்பி உன்துலிஸி இவர் ஹிஜ்ரி 544 லே பிறந்தார். வாலிப வயதில் மார்க்க கல்வியை தேடி பல நகரங்களுக்கு பிரயாணம் செய்தார்கள்.இப்னு கல்கான் கூறுகிறார்கள் இவர் அக்காலத்தின் பிரபல்யமான பேரறிஞர் காஹிரேவில் 661 லே இருந்த தாருல்ஹதீஸில் அந்நேரத்தில் பெரிய மார்க்க அறிஞராக இருந்தார்கள்.முஸ்தஃபா என்ற நூலின் ஆசிரியர் அதில் அண்ணல் நபி ஸல் அவர்களின் திருப்பெயர்களைக் குறித்து விளக்கமாக எழுதியுள்ளார். மேலும் மௌலூத் கிதாப் எழுதியுள்ளார் அதனின் பெயர் தன்வீரு ஃ பீ மவ்லிதிஸ்ஸிராஜில் முனீரி சிலர் அதனின் பெயர் தன்வீரு ஃபி பஃளில் பஷீரி வந்நதீரி என்கிறார்கள். ஹிஜ்ரி 604ல் இப்னு திஹ்யா அவர்கள் குராஸான் நாட்டிற்கு சென்று கொண்டிருந்தார்கள். அரசர் அர்பல் மீலாது சபைகளை விரும்புவர் என்பதை கேள்விப்பட்டு அந்த நூலை அரசரின் சமூகத்தில் சமர்ப்பித்தார். அதனை படித்தும் காட்டினார்.அரசர் மனமகிழ்ந்து ஓராயிரம் தீனார்களை அல்லது அஷ்ரபிய்யை அன்பளித்தார்.

இந்நிகழ்வை அதிகமான வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள்.இதனை குறித்து மீலாத் ஆதரவாளர்களும் எடுத்தெழுதியுள்ளனர்.

முன்னோர்களில் அல்லாமா ஸுயூத்தி (ரஹ்) அவர்களிடமிருந்தும் எடுத்துச் சொல்லப்படுகிறது.

ஷைகு அபுல் ஹிதாப் இப்னு தஹ்யா மீலாத் ரஸூல் குறித்து நூல் எழுதினார்.அதன் பெயர் தன்வீர் அதற்கு பகரமாக அரசர் அர்பல் ஆயிரம் தீனார்கள் கொடுத்தார்.நீண்டகாலம் அர்பலில் இருந்தார்.ஹிஜ்ரி 630லே அங்கு மரணித்தார்.இதனை குறித்து அன்வாரே ஸாதிஆவிலே அப்துஸ்ஸமீ ஃ 161 பக்கம் குறிப்பிட்டுள்ளார்.

இப்னு தஹ்யாவைப் பற்றிய நிலைப்பாடு: இப்னு தஹ்யா ஆலிம், இலக்கியவாதி,வரலாற்று ஆய்வாளர், எனினும் இதன் மூலம் அவர் பலமானவரா? பலகீனமானவரா? என்பதை அறியமுடியாது. அன்வாரே ஸாதிஆவில் பரலேவி அறிஞர் கூறுகிறார் மீலாத் மறுப்பாளர்கள் (இப்னு தஹ்யா) அவர் ஆலிம் முஹத்திஸ் எனினும் மௌலித் நூலை எழுதியதன் காரணமாக படித்ததன் காரணமாக விமர்சிக்கிறார்கள்.அன்னாரை தீயோர் என்பதாக எழுதியுள்ளனர்.ஆனால் இதற்கு மாற்றமாக

அங்கீகாரம் பெற்ற நூல்களில் அவரை புகழ்ந்துள்ளனர்.

நமது மறுப்பு: உண்மையில் இப்னு தஹ்யாவை விமர்சிப்பவர்கள் அவர் மௌலித் நூலை எழுதியதால் படித்ததால் விமர்சிக்கவில்லை.இதற்கான சான்றுகளை இனி காண்போம்!(1)அல்லாமா ஷம்சுத்தீன் தஹபி (ரஹ்) அவர்கள் " மீஜானுல் இ்திலாலில்" இவர் முஹத்திஸ், எனினும் ஹதீஸை எடுத்து சொல்வதிலே தவறு செய்பவர் என்று சொல்கிறார்.

மேலும் கூறுகிறார்: இப்னு திஹ்யாவின் நூலில் அவரைப்பற்றி குறைகூறுவதானது அது தஸ்ஹீஹ் (ஆதாரப்பூர்வமானது) மற்றும் தள்யீ்ப் (பலகீனமானது) சம்பந்தப்பட்டதாகும்.

(2)ஹாபிள் அபூபக்கர் இப்னு அப்துல் ஙனி (ரஹ்) அவர்களிடமிருந்து (இப்னு நுக்தா ஹன்பி பக்தாதி என்ற பெயரில் பிரபல்யமானவர்) எடுத்து கூறுகிறார்கள்: இப்னு தஹ்யா கண்ணியம், பிரபல்யம் பெற்றவர் எனினும் உண்மையில்லாததை வாதிடுபவர்

(3)ஹாபிள் ளியா முகத்திஸி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: இவர் எனக்கு பிடித்தமானவர் எனினும் இமாம்களை மிகவும் விமர்சிப்பவர்

(4)ஹாபிள் ளியா அவர்களுக்கு அல்லாமா இப்ராஹிம் அவர்கள் அறிவிக்கிறார்கள்: சந்தேகமின்றி மேற்குலக அறிஞர்கள் அவரை விமர்சிக்கின்றனர்.இதன் பிறகு ஹாபிள் ளியா அவர்கள் அதனை நேரில் பார்த்ததாக எழுதியுள்ளார்கள் அவரிடத்திலிருந்த அதிகமான விஷயங்கள் விமர்சனத்திற்கும் பலகீனத்திற்கும் உரியது.

(5)ஹாபிள் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் அபுல் ஹஸன் இப்னு முஃபஸ்ஸல் அவர்களின் கருத்தை எடுத்து சொல்கிறார்: இப்னு தஹ்யா ளாஹிரி மத்ஹப், முன்னோர்களான இமாம்களை விமர்சிப்பவர், அவரின் நாவானது அலங்கோலமானது,அவர் அறிவிலி,பெருமை பிடித்தவர்,மார்க்க காரியங்களில் பொடுபோக்கும் அலட்சியமும் அற்பமாக கருதுபவராக இருந்தார்.

(6)அல்லாமா இப்னு அஸாகிர் அவர்கள் தனது வரலாற்று நூலில் எழுதியுள்ளார்: இப்னு தஹ்யா நல்ல கவிஞர், எனினும் ஹதீஸ்களை அறிவிப்பதிலே புனைந்து கூறுபவர் ஏனெனில் அவர் அதிகமான ஹதீஸ்களை அறிவிப்பார்.

(7)இப்னு புகார் அவர்கள் தனது வரலாற்று நூலில் எழுதியுள்ளார் இப்னு தஹ்யா பொய்யர்

பலகீனமானவர் என்பதில் அறிஞர்கள் ஒன்றுப்பட்டு இருந்ததைப் பார்த்தேன்.கேட்காததை கேட்டதாக வாதிப்பார்.சந்திக்காதவர்களை சந்தித்தாக கூறுவார்.எனினும் அதற்கு எதிரான ஆதாரங்கள் உள்ளது. இதன் பிறகு இப்னு புகார் நீண்ட விஷயத்தை கூறுகிறார் (அதனின் சுருக்கம்) பெரும் பொய்யர், மார்க்க காரியங்களை அற்பமாக கருதுவார்.

(8)ஜலாலுத்தீன் ஸுயூத்தி (ரஹ்) அவர்களின் "தத்ரீபுர் ராவி ஷர்ஹு தக்ரீபுன் நவவியில்" குறிப்பிடுகிறார்கள்:

பொய்களை புனைபவர்.

தனது அறிவிற்கு ஏற்ப பத்வா அளிப்பார்.

ஆதாரம் கிடைக்கும் பொழுது சுயமாக ஹதீஸ்களை உருவாக்குவார்.

மஃரிப் தொழுகையை கஸ்ராக தொழலாம் என்பதற்கு ஆதாரமாக ஹதீஸை உருவாக்கியவர் என்பதாக இவரைப் பற்றி கூறப்படுகிறது.

இப்னு தஹ்யாவைப் பற்றி கடுமையாக விமர்சிப்பவர்கள் அல்லாமா தஹபி (ரஹ்), ஹாபிள் இப்னு நுக்தா (ரஹ்), ஹாபிள் இப்னு ஹஜர் (ரஹ்), ஹாபிள் ளியா (ரஹ்) ஹாபிள் அபுல்ஹஸன் (ரஹ்),

இப்னு அஸாகிர் (ரஹ்),

இப்னு புகார் (ரஹ்),

அல்லாமா சூயூத்தி (ரஹ்)

இவர்கள் அனைவரும் பேரறிஞர்கள், பல்வேறு துறைகளில் பாண்டியத்துவம் பெற்றவர்கள், பிரபல்யமான ஹனபி அறிஞர் இப்னு நுக்தா ரஹ் அவர்களும் உள்ளார்கள். அதில் மீலாதை ஆதரிக்கும் ஆதரவாளர் ஸுயூத்தி ரஹ் அவர்களும் உண்டு.இவர்களில் எவரும் இப்னு தஹ்யாவை மௌலித் குறித்த நூல் எழுதியதற்காக, படித்ததற்காக விமர்சிக்கவில்லை என்பதும் அன்வாரே ஸாதிஆவின் பரலேவிய அறிஞர் அப்துஸ்ஸமீஃ கூறியது தவறான வாதம் என்பதை அறிய முடிகிறது.

இப்னு தஹ்யாவைப் பற்றிய அனைத்து விமர்சனமும் உண்மையில் இருந்துள்ளது. ஆக இப்னு தஹ்யா அவர்கள் முஹத்திஸ், இலக்கிய வல்லுநர்,வரலாற்று ஆய்வாளர், கவிஞர், மார்க்க அறிஞர், பேரறிஞர் இது போன்ற பண்புகள் இருந்த போதிலும் ளாஹிரி மத்ஹப்,கைரு முகல்லித்,எடுத்து சொல்வதில் புனைபவர், அறிஞர்களை பழிப்பவர், மார்க்க காரியங்களை அலட்சியமாக கருதுபவர், பொய்யான ஹதீஸை புனைபவர், அறிவின்படி

தீர்ப்பளிப்பவர், அடிப்படையற்ற விஷயங்களை கூறுபவர், நாவில் தீயவர்,அசிங்கமாக பேசுபவர், அறிவிலி,பெருமைபிடித்தவர், ஆராயும் திறன் குறைந்தவர், விமர்சிப்பதற்கு தகுதியானவர். இதனால் அவர் நம்பகமானவர் அல்ல மிக பலகீனமானவர் என்பதை உறுதியான சான்றுகள் மூலம் நிரூபணமாகிறது.

மீலாத் உருவாக்கியவர், நடைமுறைப்படுத்தியவர், அது குறித்து நூல் எழுதியவர்,மூன்று பேரும் ஙைர முகல்லிதீன்கள் (மத்ஹப் மறுப்பாளர்கள்):

முதன் முதலில் உலகில் மீலாதை உண்டாக்கியவர், உமர் இப்னு முஹம்மது மவ்ஸிலி அதனை நடைமுறைப்படுத்தி பிரல்படுத்தியவர், அரசர் முளஃப்பர் தீன் அபூஸயீத் அர்பலி

மௌலித் குறித்து முதன் முதலில் நூல் எழுதியவர், உமர் இப்னு திஹ்யா கல்பி உன்துலுஸி இவர்களில் அரசர் அர்பல் மத்ஹப் மறுப்பாளர் இதனை முயீஜ்ஜுத்தீன் ஹஸன் அவர்கள் தனது வரலாற்று நூலில் பதிவு செய்திருந்ததை முன்னால் பார்த்தோம். அரசர் அர்பல்,

சுய ஆய்வின் பேரில் நடக்காதீர்! மற்றவர்களின் வழிமுறையின்படி செயல்படாதீர்! 'என

வலியுறுத்தினார்.இதனால் மார்க்க அறிஞர்கள், மார்க்கமேதைகளின் ஒருசாரார் தக்லீத் செய்வதை விட்டு விட ஆரம்பித்தார்கள்.இதனை அப்துஸ்ஸமீஃ மறுப்பதற்கு வழியின்றி ஏற்றுக்கொண்டார்.இப்னு திஹ்யாவும் கைரு முகல்லித் (மத்ஹப் மறுப்பாளர்) என்பதில் எந்தவித சந்தேகமில்லை.ஏனெனில் ஹாபிள் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள்,

அவரை ளாஹிரி மத்ஹப்ளைச் சேர்ந்தவர்,இமாம்களை விமர்சிப்பவர் என்றும், இமாம் ஸுயூத்தி (ரஹ்) அவர்கள், இப்னு தஹ்யா தனது சுய ஆய்வின்படி தீர்ப்பளிப்பவர்.இதனை உறுதிப்படுத்த கற்பனையாக ஹதீஸ்களை அறிவிப்பாளர் தொடர்களை உருவாக்குபவர்.எனவே அரசர் அர்பல் இப்னு தஹ்யா இருவரும் மத்ஹப் மறுப்பாளர்கள் என்பதானது விடியலைப் போன்று தெள்ளத்தெளிவாக வெளிப்படுகிறது.அடுத்து உமர் இப்னு முஹம்மது அவர்களின் இயற்கையான சுபாவத்தின் மூலம் விளங்கமுடிகிறது. மீலாதை முதன்முதலில் உண்டாக்கியவர் . இதனை நடைமுறைப்படுத்தி பின்பற்றியவர் அரசர் அர்பல். அதுமட்டுமின்றி அரசர் தக்லீதை விடும்படி வலியுறுத்தினார்.அதன்படி உலமாக்களின் ஒரு சாரார் அதனை செயல்படுத்தினர்.இதன்படி பார்க்கும்போது உமர் இப்னு முஹம்மதும் மத்ஹப் மறுப்பாளராக

இருந்திருப்பார் என மிகைப்பான எண்ணம் ஏற்படுகிறது.இதுதான் முற்றிலும் கியாஸ் எனும் ஆய்விற்கு நெருக்கமானது. சுருக்கம் என்னவெனில் மூன்று நபர்களும் மத்ஹப் மறுப்பாளர்கள் இப்பொழுது மீலாத் ஆதரவாளர்கள் மத்ஹப் மறுப்பாளர்களை குறித்து தீர்ப்பு என்ன? என்பதை அறியவிரும்பினால் அவர்களின் தலைவரான மௌலவி அஹ்மத் ரிளாகான் பரலேவி கூறுவதை பாருங்கள்! (சுருக்கமான கருத்து) இஜ்திஹாதின் ஆய்வும் செய்யும் ஆற்றல் இன்றி தகுதியின்றி தக்லீதை (இமாம்களை பின்பற்றுவதை) விடுபவர்

இவர் தக்லீதை விடுவதில் மிக கீழான நிலையில் உள்ளவர்.

இதனை (தக்லீதை விடுவதை) தவிர வேறு

கொள்கை ரீதியான,செயல் ரீதியான குழப்பங்கள் அவரிடம் இல்லையென்றாலும்

இவர் குர்ஆன் இமாம்களுக்கு எதிரானவர், இஜ்மாவை பிளவுப்படுத்துபவர்,முஃமீன்கள் அல்லாத பாதையை பின்பற்றுவர், வழிகெட்டவர், மார்க்கமில்லாதவர் மேலும் ஒரு கட்டுரையில் ரிளாகான் பரலேவி மத்ஹப் மறுப்பாளர்களுக்கு பின்னால் தொழுவது கூடாது என்பதாக தீர்ப்பளித்துள்ளார்.

ஆக மீலாத் மஜ்லிஸ் உருவாக்கியவர், நடைமுறைப்படுத்தியவர், முதல் நூல் ஆசியர் இம்மூன்று பேர்களும் குர்ஆன், இஜ்மா,மு஼ீன்களுக்கு எதிரானவர்கள்,வழிகேடர்கள், மார்க்க அறிவற்றவர்கள்

என்பதானது பரலேவிகளின் தலைவர் அஹ்மத் ரிளாகானின் தீர்ப்பானது இதனை உறுதிப்படுத்துகிறது.

மத்ஹப் மறுப்பாளர்கள் பின்னால் தொழுகையே கூடாது எனும் போது ஷரீஅத்தின் சட்டங்களிலே அவர்களை பின்ற்றுவது, அவர்களால் உருவாக்கப்பட்ட செயலை தீனின் அடையாள சின்னமாக பிரபல்யப்படுத்துவது, நடைமுறைப்படுத்துவது மிகப்பெரிய வழிகேடே தவிர வேறில்லை.

குறிப்பு: மீலாத் வரலாறு குறித்த ஆய்வுத் தொடரை இத்துடன் முடித்துக்கொள்கிறோம்.இது குறித்து இனி பேசுவது பொருத்தமில்லை. அடுத்தடுத்த தொடர்களை அடுத்த ரபீயுல் அவ்வலில் தொடர்வோம் இன்ஷா அல்லாஹ்